**Deposition of Witness**

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 446/2022
ம.சா.1 குருசுவாமி

| | | |
|---|---|---|
| Name | : | குருசுவாமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 18.09.2024 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. என்னுடைய விபத்து சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என்.78ஏ.9772 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. மேற்படி வாகனத்தின் இன்சூரன்ஸ் நகல் ம.சா.ஆ4. மேற்படி வாகனத்தின் ஆர் சி புத்தகம் நகல் ம.சா.ஆ5. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது மற்றும் வங்கி கணக்கு பாஸ்புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ6. 18.3.22, 14.5.24 தேதிகளில் ஆவுடையானூர் சி ஜே மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் எண்ணம் 2 ம.சா.ஆ7. ஆவுடையானூர் சி ஜே

மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ கட்டண ரசீதுகள் அசல் ம.சா.ஆ8. எனக்கு ஸ்கேன் செய்ததற்கான கட்டண ரசீது அசல் ம.சா.ஆ9. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

1ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சமயம் நான்விவசாய வேலை செய்து மாதம் ரூ.20ஆயிரம் வருமானம் ஈட்டி வந்ததை காட்டும்ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்றால் நான் செல்போன் கடை வைத்துள்ளேன். மேற்படி செல்போன் கடை வைத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நின்று கொண்டே பயணம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தில் மொத்தம் 15 நபர்கள் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கவனமாக தான் சாலை விதிகளை கடைபிடித்து வாகனத்தை ஒட்டினார் என்றால் சரியல்ல. நான் நின்று கொண்டு பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம்எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்திற்கு முன்னால் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் திடீரென பிரேக் போட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. டி.என்.66.எம்.5350 வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு கழகத்தை கட்சி சேர்க்காத காரணத்தினால் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. பார்வைமகசர், வரைபடம் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் தற்போது குணமாகிவிட்டது என்றாலும் நிரந்தர ஊனம் எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. தற்போது விவசாயம் செய்து வருகிறேன் என்றால் நான் எந்த வேலையும் தற்போது செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரர் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். 1ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால்

சரியல்ல.

2ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்த நேரம் அதிகாலை 6 டூ 6.30மணிக்குள் இருக்கும். அப்போது பணிமூட்டம் அதிகமான உள்ள நேரம் என்றால் பணிமூட்டம் இருந்தது. ஆனால் அதிகமாக இல்லை. நான் பயணம் செய்த வேனிற்கு முன்னால் டி.என்.66என்.5350 என்ற லாரி நின்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல. போய் கொண்டிருந்தது. முதல் தகவல் அறிக்கையில் நான் பயணம் செய்த வேனிற்கு முன்னால் மேற்படி லாரி நின்று கொண்டிருந்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல்தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முன்னால் சென்று கொண்டிருந்த லாரியின் பின்னால் டேஞ்சர் லேட் எரிந்ததா என்றால் எரிந்து கொண்டு தான் இருந்தது. நான் பயணம் செய்த வேனில் நான் டிரைவருக்கு இடதுபக்கமாக உட்கார்ந்து இருந்தேன். விபத்தில் எனக்கு இடதுஇடுப்பிலும், வலதுகால் தொடையிலும் காயமா என்றால் இடது இடுப்பு மற்றும் வலதுகால் முட்டியில் காயம் ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தபிறகு எனக்கு காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு நான் செல்போன் கடை எந்த ஊரில் வைத்திருந்தேன் என்று மனுவில் சொல்லவில்லை என்றால் கீழப்பாவூரில் வைத்திருந்தேன். நான் செல்போன் கடை வைத்திருந்தேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் பயணம் செய்த வாகனத்திற்கு முன்பு நின்று கொண்டிருந்த டி.என்.76.எம்.5350 என்ற லாரியின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினர்களாக கட்சி சேர்க்காத காரணத்தினால் என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. விபத்திற்கு டி.என்.76.எம்.5350 என்ற லாரியின் ஒட்டுனர் பணிமூட்டம் காரணமாக

டேஞ்சர் லைட் போடாமல் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரி போய் கொண்டு தான் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில் மொத்த தொகை ரூ.2,87,611/-க்குரிய பில் வழக்கிற்காக அதிகமாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சிஜே மருத்துவமனையில் நான் 18.3.22ல் டிஸ்சார்ஜ் ஆனேன் என்றால் சரிதான். அதன்பிறகு வேறு தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். சி ஜே மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட செலவு ரசீதுகள் ரூ.2,23,350/- தொகை மட்டும் தான் நான் செலவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மொத்த செலவின ரசீதுகளில் நான் காட்டியுள்ள தொகை தவறானது என்றால் சரியல்ல. மொத்த பில்களுக்குரிய ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அதிக இழப்பீடு பெற வேண்டி தவறான தொகையுடன் பில்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எலும்பு முறிவை காட்டக்கூடிய எக்ஸ்ரே தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவர் தரவில்லை. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் தான் எக்ஸ்ரே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆர்த்தி ஸ்கேன் எடுத்ததற்கான அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் மருத்துவமனையில் கொடுத்து விட்டேன். 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.